சுருக்கம்

பணியமைப்பு – வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி – பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மாநகராட்சிப் பணியில் தொடர்வது மற்றும் நகராட்சிப் பணிக்குச் செல்ல விருப்பம் தெரிவித்தவர்கள் – அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6) துறை

அரசாணை (நிலை) எண். 24 நாள்: 23.02.2009

மாசி 11,
திருவள்ளுவர் ஆண்டு

படிக்கப்பட்டது :-

1. வேலூர் மாநகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.சி1/16635/08 நாள் 22.10.2008.
2. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.சி1/21375/08 நாள் 26.11.2008.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.33420/2008 மா.ந.அ.1/நாள் 22.1.2009 மற்றும் ந.க.எண்.38180/2008 மா.ந.அ.1 நாள் 22.01.2009

ஆணை.–

வேலூர் மற்றும் தூத்துக்குடி நகராட்சிகள் 1.08.2008 மற்றும் 05.08.2008 முதல் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளின் சட்டம் 2008 பிரிவு 9ன்படி இம்மாநகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்கள், அலுவலர்கள் சம்பந்தப்பட்ட மாநகராட்சி பணியாளர்களாக கருதப்படுவார்கள். எனினும் இம்மாநகராட்சிகளிலிருந்து தமிழ்நாடு நகராட்சிப்பணிக்கு செல்ல விரும்புகிறவர்களின் விருப்பத்தை பெற்று அவர்களை அப்பணிக்கு திருப்பி அனுப்பப்படவேண்டும். மேலும் ஒவ்வொரு மாநகராட்சியும் பணிநியமனம், பதவிஉயர்வு, பணியமைப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கைக்கள் தொடர்பானவர்களில் தனித்தனி அலகுகளாக செயல்படும்.

2.முதலாவதாக மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர்கள் மாநகராட்சிப் பணியிலிருந்து தமிழ்நாடு நகராட்சிப் பணியமைப்பில் தொடர்ந்து பணி புரிய விருப்பம் தெரிவித்தவர்களின் பட்டியலை

அனுப்பியுள்ளார்கள். மேற்படி செயற்குறிப்புகள் மீது தக்க ஆணை வழங்கும்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமாக ஆய்வு செய்த பின், வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு நெறிமுறைப்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை பிறப்பிக்கிறது.

I) வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி சட்டப்படி வேலூர் மற்றும் தூத்துக்கடி நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டு செயல்பட துவங்கியபோதே அதில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவரும் மாநகராட்சி ஊழியர்களாக கருதப்பட வேண்டும் எனினும் மேற்கண்ட மாநகராட்சிகளில் மாநகராட்சி பணியமைப்பிலிருந்து தமிழ்நாடு நகராட்சி பணியமைப்பிற்கு செல்ல விருப்பம் தெரிவித்தவர்களுக்கு அனுமதியளித்து முன்னுரிமை அடிப்படையில் தக்க பணிமாறுதல்கள் மற்றும் பணியிடங்களை வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

II) புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாநகராட்சிகளில் பணிபுரிய நிர்வாக காரணங்களுக்காக மாறுதல் செய்யப்பட்ட பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் 01.08.2008 மற்றும் 05.08.2008க்கு பிறகும் இந்த ஆணை வெளியிடும் தேதிவரை மாநகராட்சிப் பணியில் சேர்ந்த அலுவலர்கள் தொடர்ந்து மாநகராட்சியிலேயே இருக்க விரும்பினால், மாநகராட்சியிலேயே தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கலாம். இவர்களின் பணியமைப்பு முதுநிலைப் பட்டியல் (inter-se-seniority) அந்தப் பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

III) இவ்வாணை வெளியிட்ட பிறகு நகராட்சிப் பணியிலிருந்து விருப்பத்தின் பேரில் இம்மாநகராட்சி பணிகளில் வர விரும்புகிறவர்கள். அவர்கள் ஏற்கனவே பெற்றுவந்த ஊதியத்திற்கு இடையூறு இல்லாத வகையில் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் (category) உள்ளவர்களுக்கு இளையவராக அனுமதிக்கலாம்.

Iv) வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர்கள் அம்மாநகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் முதுநிலை

பட்டியலை தயார் செய்து அவற்றை 31.03.2009க்குள் வெளியிட வேண்டும். இது தொடர்பான முரண்பாடுகள் (Anamoly) ஏதேனும் ஏற்பட்டால் நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக அரசுக்கு அனுப்பப்பட வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
சேப்பாக்கம், சென்னை.5
ஆணையர், வேலூர் / தூத்துக்குடி மாநகராட்சி
இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, குறளகம், சென்னை.108.
மாவட்ட ஆட்சியர், வேலூர்/தூத்துக்குடி
நகல்:-
அனைத்து பணியமைப்புப் பிரிவுகள் நகராட்சி நிர்வாகம்
மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை.9.
அரசு செயலாளரின் தனிச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் துறை, சென்னை.9
நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் துறை, (அ.ந.2) சென்னை.9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்